**சிவகாசி நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**
**சாதாரணக்கூட்டம் எண் .** **நாள் :30.06.2021.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் ஆனி திங்கள் 16 ஆம் நாள் 2021ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. சோ.பார்த்தசாரதி,B.P.T., M.Sc.(Psy).**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. சிவகாசி நகராட்சி பகுதியில் நகரின் முக்கிய வீதிகள் வழியாக செல்லும் கிருதுமால் ஓடையின் பிரிவுகள்,
   1. பெரிய குளம் முதல் BSNL அலுவலகம் வரை
   2. BSNL அலுவலகம் முதல் சிறுகுளம் கண்மாய் வரை
   3. முஸ்லீம் பள்ளி பின்புறம் முதல் நாடார் லாடஜ் வரை
   4. நாடார் லாட்ஜ் முதல் KTR பாலம் வரை
   5. KTR பாலம் முதல் சிவம் மருத்துவமனை வரை
   6. சிவம் மருத்துவமனை முதல் தெய்வானை நகர் வரை

   நகராட்சியின் எல்லை வரையிலான ஓடையின் நீளம் 7 கி.மீ. உத்தேசமாக உள்ளது. மேற்படி ஓடையில் SILT அதிகமாக உள்ளதாலும், மரம் செடிகள் வளர்ந்துள்ளதாலும் மழைக்காலங்களில் தண்ணீர் செல்வதற்கு சிரமமாக உள்ளது. மேற்படி ஓடையில் உள்ள கழிவு மண் மற்றும் மரம் செடிகளை சுத்தம் செய்வதற்கு பணியாளர்களால் இயலாத காரணத்தினால் JCB இயந்திரம் பயன்படுத்தி சுத்தம் செய்வது அத்தியாவசிய தேவையாக உள்ளது. சுமார் 700 மணி நேரம் JCB இயந்திரம் வாடகைக்கு பயன்படுத்த வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம்) -க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு:**

   1. நகரில் மழைநீர் தேங்காத வண்ணம் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் மேற்படி ஓடைகளை சுத்தம் செய்ய வேண்டியது அத்தியாவசிய தேவையாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.
   2. மேலும் மேற்படி செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

   **ந.க.எண்: 3801/2021/எச்1**
   அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1149

2. சிவகாசி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு வீடு வீடாக குப்பை பிரித்து சேகரிக்கும் பணிக்கு 1200 வீட்டிற்கு ஒரு LCV என்ற முறையில் $8^{th}$ SHP திட்டத்தின் மூலம் இந்நகராட்சிக்கு ஒரு LCV ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி LCV வாகனம் BS4 வாகன MODEL தற்சமயம் மார்க்கெட்டில் இல்லாத காரணத்தினாலும் BS6 LCV வாகன MODEL மட்டும் மார்க்கெட்டில் உள்ளதாலும் மேற்படி BS6 வாகனத்தின் மதிப்பீடு உயர்ந்துள்ளது. எனவே DPR தொகை ரூ.5,60,000/- நீங்கலாக கூடுதல் செலவீனம் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் )-க்கும், மேற்படி LCV வாகனத்தினை வாங்குவதற்கு பொறியியல் பிரிவின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 . நகரில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த மேற்படி வாகனம் அத்தியாவசிய தேவையாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேலும் மேற்படி செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 3787/2021/எச்1**
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1150

3. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கும் TN84V 1164 (Tata Ace) தகுதிச் சான்று (FC) பெறுவதற்கும் மேற்படி வாகனத்தின் பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு 30.06.2021-ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் சாத்துார் ரோடு, சிவகாசி | 46700/- |
| 2. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்துார் ரோடு, சிவகாசி. | 45550/- |

வரப்பெற்ற 2 (இரண்டு) ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் தந்துள்ள வரிசை எண்-2ல் உள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்துார் ரோடு, சிவகாசி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொறியியல் பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2913/2021/எச்2
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1151

4. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கும் TN95 C 1816 (Tata Ace) தகுதிச் சான்று (FC) பெறுவதற்கும் மேற்படி வாகனத்தின் பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு 30.06.2021-ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் சாத்துார் ரோடு, சிவகாசி | 52200/- |
| 2. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்துார் ரோடு, சிவகாசி. | 51250/- |

வரப்பெற்ற 2 (இரண்டு) ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் தந்துள்ள வரிசை எண்-2ல் உள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்துார் ரோடு, சிவகாசி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொறியியல் பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2914/2021/எச்2

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1152

5. சிவகாசி நகராட்சி எல்கைக்குட்பட்ட திருத்தங்கல் ரோடும் முஸ்லீம் நடுத்தெருவும் சந்திக்கும் இடத்திலுள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு (01.04.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை மூன்றாண்டு காலம்) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.02.2021ல் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற ஏல மற்றும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக திரு.பொ.ராமமூர்த்தி கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.517000/- ஆனது 2020-2021ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.347290/- ஐ காட்டிலும் ரூ.169710/- கூடுதலாக இருப்பதாலும் மற்றொரு ஏலதாரராகிய திரு.பி.பாக்கியராஜ், சிவகாசி என்பவரின் ஏலக்கேள்வி ரூ.4,06,000/- மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,01,001/- ஆகியவற்றைத் காட்டிலும் முறையே ரூ.1,11,000/- மற்றும் ரூ.1,15,999/- கூடுதலாக உள்ளதாலும் திரு.பொ.ராமமூர்த்தி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்படி கட்டணம் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான குத்தகை உரிமையை திரு.பொ.ராமமூர்த்தி என்பவருக்கு ஒப்படைப்பதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் 26.02.2021 மாலையில் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலுக்கான தேர்தல் நன்னடத்தை விதி அமுலுக்கு வந்ததால் மேற்படி ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகையை மன்றத்தின் பார்வைக்கு வைத்து முடிவு செய்ய இயலவில்லை என்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 5304/2021/ஆர்2 நாள் 16.03.2021ன்படி மேற்படி குத்தகை இனத்தின் முந்தைய (2020-2021) ஏலதாரர் திரு.பி.பாக்கியராஜ் என்பவர் 30.06.2021ம் தேதி வரையிலும் 2020-2021 குத்தகை தொகையிலேயே தொடர்ந்து நடத்துவதற்கு சிவகாசி நகராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண் 310/2020/அ4 நாள் 24.03.2021ன்படி அனுமதி வழங்கப்பட்டது. அவ்வகையில் ஏப்ரல் 2021 முதல் ஜீன் 2021 வரையிலுமான காலத்திற்கு ரூ.88,560/- நகராட்சிக்கு வருவாய் வரப்பெற்றுள்ளது. எனவே திரு.பொ.ராமமூர்த்தி அவர்கள் 26.02.2021ம் தேதி அன்று அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.517000/-ல் 01.04.2021 முதல் 30.06.2021 வரையிலுமான தொகையினை கழித்துக் கொண்டு 01.07.2021 முதல் 31.03.2024 வரையிலுமான காலத்திற்கு குத்தகை உரிமையை வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **ஏலக்கேள்வி தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1 | திரு.பொ.ராமமூர்த்தி,<br>த/பெ பொன்னுவேல்,<br>2/89, சுந்தரக்குடும்பன்பட்டி,<br>செட்டுடையான்பட்டி (அஞ்சல்),<br>சாத்தூர் தாலுகா | - | 517000/- |
| 2 | திரு.பி.பாக்கியராஜ்,<br>1074, காமராஜர் ரோடு,<br>சிவகாசி | 406000/- | 401001/- |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 310/2020/அ4

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1153

6. இந்நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா தினசரி காய்கறி மார்கெட்டில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு (01.07.2021 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை மூன்றாண்டு காலம்) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.06.2021ம் தேதியன்று கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. கீழ்க்கண்டவாறு இரண்டு ஏலக்கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது.
கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக திரு.எஸ்.குருபாண்டியன் கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி தொகையான ரூ.14,01,000/- ஆனது 2020-2021ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.11,70,303/- காட்டிலும் ரூ.2,30,697/- கூடுதலாக இருப்பதால் மேற்படி ஏலத்தொகையினை ஏற்று மேற்படி தினசரி காய்கறி மார்கெட்டில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான குத்தகை உரிமையை திரு.எஸ்.குருபாண்டியன் என்பவருக்கு ஒப்படைப்பதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.சி.சுப்பிரமணியம்,<br>166, போலீஸ் ஸ்டேசன் ரோடு,<br>சிவகாசி | 14,00,000/- | - |
| 2 | திரு.எஸ்.குருபாண்டியன்,<br>1/76, வேண்ராயபுரம்,<br>தி.மானகசேரி (அஞ்சல்),<br>சிவகாசி | 14,01,000/- | - |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 310/2020/அ4
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1154

7. திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் கடந்த 05.04.2020ம் தேதி அன்று காலமாகிவிட்டதால், அன்னாரின் வாரிசுதாரர் (மனைவி) திருமதி.M.பாண்டியம்மாள் என்பவர் தனது கணவர் செலுத்திய (1% EMD) தொகையினை வழங்க கோரி 26.05.2020ம் தேதி அன்று மனு அளித்துள்ளார். கீழ்காணும் பணிகளுக்கு திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள (1% EMD) மொத்த முன் வைப்புத் தொகை ரூ.1,16,750/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று ஐம்பது) மட்டும் திரு.P.முருகன் ஒப்பந்ததாரரின் வாரிசுதாராகிய மனைவி திருமதி.M.பாண்டியம்மாள் என்பவருக்கு வழங்குவதற்கு சிவகாசி நகராட்சியின் உதவிப்பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்களால் 14.09.2020ம் தேதி அன்று பரிந்துரை குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2014-2015 மற்றும் 2015-2016 நிதி ஆண்டில் திரு.P.முருகன், ஒப்பந்ததாரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை விவரம் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு-2020-2021 வால்யூம்-I மற்றும் IIல் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு செலுத்திய மொத்த வைப்புத் தொகை ரூ.1,16,750/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் மனைவி திருமதி.M.பாண்டியம்மாள் என்பவருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு (4016 RF) | பணியின் விபரம் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு ஆண்டு விபரம் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பதிவேட்டின் வரிசை எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|

| | | | | விபரம் | விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2020-2021<br>வால்யூம் - II<br>4016 RF | வார்டு எண்.09 நேஷனல் காலனியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 2020-2021<br>(2015-2016) | 13 | 716 | 18,000 |
| 2 | 2020-2021<br>வால்யூம் - II<br>4016 RF | அம்மன் கோவில்பட்டி நகராட்சி பள்ளியில் சுகாதார வளாகம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி | 2020-2021<br>(2015-2016) | 3 | 617 | 25,000 |
| 3 | 2020-2021<br>வால்யூம் - II<br>4016 RF | வார்டு எண்.24ல் கிருதுமால் ஓடையில் வாறுகால் அமைக்கும் பணி | 2020-2021<br>(2015-2016) | 9 | 672 | 25,000 |
| 4 | 2020-2021<br>வால்யூம் - II<br>4016 RF | வார்டு எண்.18ல் கிருதுமால் ஓடையில் வாறுகால் அமைக்கும் பணி | 2020-2021<br>(2015-2016) | 8 | 663 | 24,000 |
| 5 | 2020-2021<br>வால்யூம் - I<br>4016 RF | சிவகாசி நகராட்சி அரசன் காம்பளக்ஸ் அருகிலுள்ள கிருதுமால் ஓடையில் கிழக்கு பக்கம் சிமெண்ட் தளம் அமைத்து வாறுகால் அமைக்கும் பணி | 2020-2021<br>(2014-2015) | 46 | 534 | 24,750 |
| | | | | | மொத்தம் | **1,16,750** |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2448/2020/பி4
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1155

8. சிவகாசி நகராட்சி வார்டு-2 அண்ணாகாலணி மேற்க்கு பகுதியில் சுமார் 50 வீடுகளுக்கு குடிநீர் சீரான வினியோகம் இல்லாததால் அருகில் உள்ள காமராஜர் சாலை ஜானகியம்மாள் மருத்துவமனை அருகில் வால்வு மற்றும் குழாய்கள் அமைத்து அப்பகுதி மக்களுக்கு சீராக குடிநீர் வினியோகம் செய்வதற்க்கும் மற்றும் வார்டு எண்-8 60 வீட்டு காலணி உள்ள சிறுமின் விசை பம்ப் பழுது நீக்கம் செய்வதற்க்கும் ஆகும் உத்தேச மதிப்பு தொகை ரூ.1,00,000 (ஒரு இலட்சம் மட்டும் ) ஆகும். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை குடிநீர் நிதியில் மேற்க்கொள்ளலாம்.

ந.க.எண். 2911 /2021 /இ2.
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1156

9. சிவகாசி நகராட்சியில் பொன் விழா ஆண்டு திட்டம்-2020-2021-ம் ஆண்டுக்குரிய நகராட்சி சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி பணிகளை 18.02.2021 மாநில அளவில் தமிழ் தினசரி நாளிதழில் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு FLAME ADVERTISING CO PVT.LTD, CHENNAI நாளிதழுக்கு தொகை ரூ.1,68,525/-ஐ ( ரூபாய் லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐநூற்றி இருபத்தைந்து மட்டும் ) பட்டியல் எண். P/548/FEB-21 நாள்.18.02.2021-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1635/ 2020 / இ1

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1157

தனி அலுவலர்,
சிவகாசி நகர்மன்றம்.